The Paduka is here said to have really enabled Sri Rama to duly keep up His promise to reside in the forest for fourteen years. With a view to ultimately kill Ravana, who was a source of great trouble and danger to the Maharshis, Rama decided upon a journey to the Dandaka forest, and incidentally rendered His father Dasaratha, a truthful person by acting according to the boon he had given to Kaikeyi. But when Bharata came to Chitrakuta and pressed Rama to give up going to the forest,—in fact he exerted great pressure in ever so many ways, including praayopavesam a form of Satyagraha,—Sri Rama felt non-plussed. The Vimarda or pressure exerted by Bharata was such that Rama had to choose between giving up His promise, or giving up Bharata. Luckily the Paduka came to His rescue and readily agreed to return to Ayodhya and thereby made it possible for Sri Rama to act according to His word and thereby become a Satyasandha. The benefit that the Paduka conferred on Rama by its going back to Ayodhya, thereby enabling Rama to go to the forest as desired by Him for Ravana-Vadha and as promised by Him to His father, is the topic of this sloka. But for the Paduka the twin purpose, which Rama had set his mind on, could not have been achieved.

अभ्युपेत विनिवृत्तिसाहसा
देवि ! रङ्गपतिरत्नपादुके ! ।
अत्यशेत भवती महीयसा
पारतन्त्र्यविभवेन मैथिलीम् ॥ १२४ ॥

Abhyupeta-vinivritti-saahasaa
Devi! Rangapati-Ratnapaaduke!
Atyaseta Bhavatee maheeyasaa
Paaratantrya-vibhavena Maithileem || (124)

(Paduka) Devi! Gem-set Paduka of Ranganatha? By readily agreeing to do the rash and daring act of going back to Ayodhya, Thou excellest Sita Devi in the matter of implicit obedience.

Paduka's act of returning to Ayodhya was compared with the act of the feet of Rama which refused to do so, in sloka (2) above. In this Sloka it is pointed out that the Paduka scores over Sita Devi too. To part company with Rama is nothing short of a saapasa, a rash and daring deed. Sita Devi would not agree to be away from Rama on any account. But when the occasion came and the Paduka was commanded to go back to Ayodhya and relieve the distress of Bharatha, the Paduka implicitly obeyed that command. This is contrasted with Rama's command to Sita Devi to stay back in Ayodhya and allow Him to go to the forest alone. Sita Devi would not listen to it, as she was unwilling to be separated from Him. That was an occasion when Sita Devi omitted to do Rama's behest. Paduka however even at the risk of separation from Rama and His feet implicitly obeyed His command and went back to Ayodhya. Desika refers to this as 'maheeyasa paaratantria' by the greatness of the excessive sense of obedience. Thus Paduka is shown to excel even Sita Devi in the matter of obeying Rama's commands.

अव्याहतां रघुपतेर्वहतः प्रतिज्ञाम्
अंसाधिरोहणरसे विहते धरण्याः ।
प्रादान्निवृत्य भवती मणिपादरक्षे !
स्पर्शं पदेन विगतव्यवधानखेदम् ॥ १२५ ॥

Avyaahataam Raghupater-vahatah pratijnaam
*Amsaadhirohanarase vihate **Dharanyaah*** |
Praadaan-nivritya Bhavatee Manipaadarakshe!
Sparsam padena vigatavyavadhaana khedam || (125)

Gem-set Paduka! when Rama's determination to go to the forest was not shaken (by Bharata's attempts) the desire of Bhoomidevi to perch on his shoulder was frustrated. Thou returned to Ayodhya and thereby wiped out the grief of Bhoomidevi; for, by Thy coming back to the Kingdom, direct contact of Sri Rama's Feet was obtained by the earth.

In this Sloka the poet thinks of the benefit conferred by the Paduka on Bhoomidevi, one of the Consorts of the Lord. When king Dasaratha with the active support of the citizens of Ayodhya determined to crown Rama as king, Earth was very happy and was

eagerly looking forward to having a place on the shoulder of Sri Rama. This is a metaphorical way of saying that Rama would shoulder the duties of a King, which means Bhoomidevi will have a place on His shoulder. But with Rama unflinchingly intent upon keeping His word, Bhoomidevi had necessarily to suffer a setback in securing her desire, though temporarily and only for a period of 14 years. Paduka Devi, with an eye to every one's well being and happiness wanted to give some satisfaction to Bhoomidevi. Therefore it is very nicely pointed out in this Sloka that Paduka left for Ayodhya thereby making it necessary for Sri Rama to walk bare-footed on the earth. Direct contact of Rama's Feet obtained by Bhoomeedevi greatly relieved the distress she began to feel when Rama refused to accept the kingdom.

Thus by the return of Paduka to Ayodhya, Paduka is said to have conferred a great benefit upon Bhoomidevi. It is evidently Desika's intention to show how the return of Paduka to Ayodhya was conducive to the well being of the entire world in all respects and in all aspects. The reference to Bhoomeedevi having a place on the shoulder of the Lord, made in this sloka, reminds us of Sloka 18 of Bhoostuti wherein it is stated that Bhoomidevi was coronated Empress of the world, when she was enthroned on the broad shoulder of the Lord as Varaha. Reading the two slokas together it looks as if the Lord gave Bhoodevi a place on His shoulder (amsa) in Varahavatara, and therefore Bhoodevi was again desirous of having a seat upon the Lord's shoulder when he became Sri Rama.

From this Sloka onwards the metre is Vasantatilaka. (125)

(To be continued)

* * *

INFORMATION TO THE PUBLIC.

			Rs. Ps.
1.	KALYANOTSAVAM	..	700—00
2.	SAHASRAKALASABHISHEKAM	..	1,500—00
3.	TIRUPPAVADA	..	2,250—00
4.	KOIL ALWAR TIRUMANJANAM	..	1,745—00

Prasada Panyarams:

1.	DADYODANAM	..	35—00
2.	PULIHORA	..	50—00
3.	PONGAL	..	60—00
4.	CHAKKARAPONGALI	..	75—00
5.	SAKARABATH	..	70—00
6.	KESARI BATH	..	80—00
7.	SEERA	..	170—00
8.	PAYASAM	..	100—00
9.	LADDU	..	300—00
10.	VADA	..	130—00
11.	POLI	..	110—00
12.	TENTOLA	..	115—00
13.	APPAM	..	85—00
14.	SUKEE	..	70—00
15.	JILEBI	..	225—00
16.	DOSAI	..	65—00

Executive Officer. T. T. D.



ஸப்தகிரி

ா: 2] ஜூலை [இதழ்: 2

ஆசிரியா:

ம். சந்திரமௌளி ரெட்டி,
எம். ஏ., ஐ. ஏ. எஸ்.
எக்ஸிக்யூடிவ ஆபிஸா,
மலை திருப்பதி தேவஸ்தானம்.
திருப்பதி.

★

ஆண்டு சந்தா ரூ. 3/—
தனி பிரதி 25 பை

★

ாத இதழுக்கும், மற்றும்
இதர விபரங்களுக்கும்:

ஆசிரியர்,
மலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி.

பொருள் அடக்கம்





ஆசிரியர் உரை

நமது ஸப்தகிரி வாசகர்களின் நெடுநாளைய கனவு நினைவாவதை அறிவிக்க மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

பத்திரிகை நிர்வாகம், பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோருக்கு அன்பளிப்புத் தொகை அளிக்க வேண்டுமென்றும், 1971 ஏப்ரல் மாத ஸப்தகிரி வெளியீட்டிலிருந்து இத்தொகை தரப்படவேண்டும் என்றும், கருதியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

நாங்கள் பலமுறை அறிவித்தபடி அறிஞர்களுடைய மனதில் ஆழ்ந்து, புதைந்து கிடக்கும் நல்ல விஷயங்களை வெளிக்கொண்டுவரும் எண்ணத்தோடும், அவர்களாலே மேன்மையான விஷயங்கள் உண்டாக காரணமாகும் என்பதாலும், இந்த சொல்ப அன்பளிப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்பளிப்பு மிகவும் குறைவானது என்பதை சிலர் நினைத்தால், அவ்விஷயம் ஆச்சர்யப்படுவதற்கில்லை, இந்த அன்பளிப்பு எழுத்தாளருக்கு ஊக்கமளிப்பதின் பொருட்டேயாகும்.

இந்த அன்பளிப்பு முறையால் நல்ல மேன்மையான, கட்டுரைகள், போட்டோக்கள், வர்ணச்சித்திரங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் அனுப்பும் கட்டுரைகள், படங்கள் தேவஸ்தானத்திற்குச் சம்பந்தப்பட்டதாகவும், வாசகர் பக்தியும், ஏற்படக்கூடியதாக இருக்கவேண்டுமென்று நினைப்பது தவருகாது.

பொறுமை வேண்டும்

ஸ்ரீவெங்கடேசப்பெருமானைத் தரிசனம் செய்ய திருப்பதியிலும் திருமலையிலும் பக்தர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிருர்கள். இப்பக்தர்கள் தரிசனம் செய்யவும், பஸ்ஸிற்கும், இடவசதிக்கும், உணவு முதலிய வசதிக்கும் நீண்ட, வெகு நேர 'க்யூ' வில் பொறுமையாக நிற்கிருர்கள் என்பதை தேவஸ்தான நிர்வாகம் கவனித்து வருகிறது. இச்சங்கடமான நிலையை மாற்றி அமைப்பதற்கு நிர்வாகம் யோசனை செய்து வருகிறது.

இக்குறைகளை நீக்க வழிவகைகளை மேற்கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விஷயத்தை மற்ருெரு பக்கத்தில் தெரியப்படுத்தியுள்ளோம். மேலும் பக்தர்கள் டாக்ஸியில் அதிக மக்களை ஏற்றி வருவதையும், சிப்பந்திகளுக்கு லஞ்சம் கொடுப்பதையும், குறுக்கு வழியைக் கடைப்பிடிப்பதையும் தவிர்க்கும்படி நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது. மேற்சொல்லிய விபரங்களைப் பொது மக்கள் கவனத்தில் கொள்ளாமல் இருந்தால், பொதுமக்களுக்கும், சிப்பந்திகளுக்கும் இடையூறு ஏற்படுமென்பதையும் நிர்வாகத்தினருக்கும் சிரமம் ஏற்படும் என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

செய்தி சுருக்கம்

ஆஸ்தான வித்துஷியாக குமாரி லதா மங்கேஷ்கர்

கலையில் வல்லுநர்களான மேதைகளுக்கு ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமியின் ஆஸ்தான வித்வான்களாக நியமிப்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. சாஸ்திர, ஆகம, வேத விற்பன்னர்களைப் போலவே ஸங்கீத மேதைகளான ஸ்ரீ கண்டஸால வேங்கடேச்வரராவ், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி போன்ற பலர் இந்த கௌரவத்தைப் பெற்றுள்ளனர்.

நம் நாட்டின் வட-இந்தியருக்கு இதில் இடமில்லாதிருந்தது. ஆனால் இவ்வருஷம் இந்தியாவைச் சேர்ந்தவரும், அறிமுகம் தேவையில்லாதவரும், இசைக் குயிலான குமாரி லதாமங்கேஷ்கருக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வரஸ்வாமி ஆஸ்தானத்தில் ஆஸ்தான விதுஷி என்கிற விருது அளிக்கப்பட்டது. தி. தி. தே. போர்டு குமாரி லதா மங்கேஷ்கரை ஆஸ்தான வித்துஷியாக ஏற்று நியமித்தது.

போர்டின் இந்த நடவடிக்கை உண்மையில் சிறந்ததுடன் தேசத்தின் கலை ஒற்றுமைக்கு வழிக்காட்டியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

புதுடில்லியில் செய்தி விசாரணை அறிவிப்பு நிலையம்

புதுடில்லியில் தி. தி. தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு கல்லூரி நடந்து வந்த போதிலும், இந்தியாவின் தலை நகரத்தில் தற்காலம் செய்தி விசாரணை அறிவிப்பு நிலையம் (Information Centre) இதுவரையிலும் கிடையாது இதை பூர்த்தி செய்வதற்கென தேவஸ்தான விருந்தினர் தங்குமிடத்தோடு கூடிய செய்தி நிலையத்தை முன்னால் ஆந்திர பிரதேச விருந்தினர் விடுதி இருந்த இடத்தில் இப்போது அமைக்க தீர்மானித்துள்ளனர்.

திருமலா எக்ஸ்பிரஸ்

இப்பொழுது விஜயவாடாவிற்கும் - திருப்பதிக்கும் வாரத்திற்கு இருமுறை சென்று வரும் திருமலா எக்ஸ்பிரஸ் ரயிலை திருப்பதியிலிருந்து வால்டேருக்கும், குண்டூர் வழியாக (சர்கார் எக்ஸ்பிரஸ்போல்) தினந்தோறும் விடும்படி ரயில்வேயை தேவஸ்தான போர்டு ஒரு தீர்மானத்தில் கேட்டுக் கொண்டுள்ளது.

இப்படிச் செய்தால் ஸ்ரீமந் நாராயணனின் ஸ்தலங்களான திருப்பதிக்கும் சிம்ஹாசலத்திற்குமிடையே யாத்ரீகர்கள் தினந்தோறும் நேராகவும், தவறுமல் பிரயாணம் செய்ய ரயில்வசதி கிடைக்கும்.

பாலாஜி எக்ஸ்பிரஸ், திருமலா எக்ஸ்பிரஸ், இவ்விரண்டு ரயிலைப்பற்றி ஸ்ரீ வெங்கடேச்வர பக்தர்கள் அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேம். இவ்விரண்டு ரயில்களில் பாலாஜி எக்ஸ்பிரஸ் (திருப்பதி - மதருஸ் செல்லுவது) ஜூன் மாதத்திலிருந்து தினந்தோறும் போகின்றது. இச்சந்தர்ப்பத்தில் ஸப்தகிரியின் 71 பிப்ரவரி இதழின் தலையங்கத்தையும் தேவஸ்தான போர்டின் தீர்மானத்தையும் கூர்ந்து வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

ரிஷிகேசத்தில் ஆந்திர ஆச்ரமம்

புனிதமான இமயமலையிலுள்ள பத்ரிநாத், கேதாரநாத் ஆகிய இடங்களுக்குச் செல்லும் யாத்ரிகளுக்குக் கவர்ச்சியூட்டும் வகையில் இமயமலையினடிவாரத்தில் தி. தி. தேவஸ்தானத்தின் ஆந்திர ஆச்ரமம் அமைக்கப்பட்டுள்ளது.

1970 மே மாதத்தில் 2677 யாத்ரீகர்களுக்கு இடவசதியளித்துத் தன் செலவுக்கென ரூ. 1677 ரூபாய்கள் வருமானம் பெற்ற, ஷை ஆந்திர ஆச்ரமம் இவ்வாண்டு (1971) மே மாதம் 3527 யாத்ரீகர்களுக்கு சௌகர்யம் செய்து கொடுத்து ரூ. 3870/— வருமானம் தந்துள்ளது.

இவ்வருடத்திய யாத்திரை காலத்தின் முக்கிய விசேஷம்; ஆந்திர ஆச்ரமத்திற்கு ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டரா, மைசூர் முதலிய இடங்களைச் சேர்ந்த யாத்ரீகர்கள் வருகை தந்து கோவில்களுக்குச் சென்று வந்தனர். முன்பெல்லால் தமிழ் நாடு, ஆந்திரம் முதலிய இடங்களைச் சேர்ந்த யாத்ரீகர்கள் மட்டும்தான் வருவது வழக்கம்.

நியமனங்கள்

ஸ்ரீ. எஸ். ஸத்யநாரயணராஜு, எக்ஸிக்யூடிவ் எஞ்ஜினீராகப் பதவியில் அமர்த்தப்பட்டார். தேவஸ்தான சர்வீஸின் எக்ஸிக்யூடிவ் எஞ்ஜ்னீயர் பதவி பொறுப்பை ஏற்றிருக்கிறுர். அதற்குப் பதிலாக ஸ்ரீ. எஸ். கோபால கிருஷ்ணய்ய செட்டி அவர்கள் திரும்பி அரசாங்க எஞ்ஜினீயராகச் சென்று விட்டார்.

★

உங்களிடம் ஒரு வார்த்தை

ஸ்ரீ. M. சந்திரமௌளி ரெட்டி.



(நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கும் பக்தர்களின் எண்ணிக்கையினால் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைப் பற்றி தேவஸ்தான காரிய நிர்வாக அதிகாரி ஸ்ரீ. எம். சந்திரமௌளி ரெட்டியார், பத்திரிகையில் அறிவித்த ஆங்கிலமொழி விளக்கத்திற்கு இது தமிழாக்கம். ||ஆ||)

பகவானை தரிசிக்க நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கும், குறிப்பாக மே மாதத்திலிருந்து திருமலைக்கு வந்து கொண்டிருக்கும் பக்தர்களினால் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு, எல்லா வகைகளிலும் போக்குவரத்து, தரிசனம், சாப்பாடு, இட வசதிகளின் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளை ஆராய்கையில், யாத்திரிகர்கள் கவனித்து, கடைப்பிடித்து லாபமடைய, அவரவர் அபிப்பிராயங்களை விரிவாகவும், தெளிவாகவும் தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொண்டு கீழ்க்கண்டவிஷயங்களை எழுதுகிறேன்.

சனி, ஞாயிறுகளிலும், மற்ற விடுமுறை தினங்களிலும் திருமலைக்கு பக்தர்கள் அதிகமாக வருவது வழக்கமாக இருக்கிறது. சனிக்கிழமை பகவானுக்கு விசேஷ தினமாகக் கருதப்படுவதே இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு தரிசன வசதி செய்து கொடுப்பது மிகவும் அஸாத்தியமாகிறது. அதனால் யாத்திரிகர்கள் தங்கள் யாத்திரையை விடுமுறை தினங்களுக்கே ஒதுக்கி வைக்காமல் இதர நாட்களிலும் கூட சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் திருமலைக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திருப்பதிக்கு வந்த பக்தர்கள் உடனே திருமலைக்கு வருவதற்கு, பஸ் ஸௌகரியத்தில் சிறிது தொல்லை ஏற்படுகிறது. நீளமான ''க்யூ'' வரிசைகளில் நின்றுகொண்டு அவதிப்பட

முடியாத பக்திமான்கள் அக்கிரம வியாபாரம் செய்யும் வாடகைக் கார்களிலோ, அல்லது அனுமதியற்ற கார்களிலோ நெருக்கமாக உட்கார்ந்துகொண்டு திருமலைக்கு வருகிறார்கள். அனுபவமற்ற ஒருவர் ஒன்பது பேர்களை அக்கிரமமாக ஓர் சின்ன வாடகைக் காரில் ஏற்றிச் சென்று ஆபத்திற்கு இரையாக்கி, இருவரை துர்மரணத்திற்கு ஆளாக்கியது அனைவருக்கும் தெரிந்ததே. இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளப் போக்குவரத்து நிர்வாகம், காவல்துறை சிப்பந்திகள் போதுமான கட்டுத்திட்டங்கள் செய்து கொண்டிருந்தாலும், யாத்திரிகர்களும் பகவானை தரிசிக்க வேண்டுமென்ற ஆவலினால் வாடகைக் காரில் அளவுக்குமீறிப் பிரயாணிகள் பிரயாணம் செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்பதும், சேராமல் இருப்பதைவிட, நிதானமாகச் சேருவது நல்லதென்பதும் என் கருத்து, வேண்டுகோள்.

தரிசனத்திற்காக வரும் பக்தர்களினால் கோவிலின் அருகில் வரிசைகள், நாளுக்குநாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சனிக் கிழமைகளில் 15,000 முதல் 20,000 பேர்களுக்கு மேல், பெருமாளைத் தரிசிக்க வருகிறார்கள். தினசரி 16 மணி நேரம் ஸர்வ தரிசனம் ஏற்பாடு செய்தாலும் சுமார் 15,000 பேர் தரிசனம் செய்து கொள்ளவேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் 5 ஸெகண்டுகள் மாத்திரம்தான் வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் பக்தர்கள் கோவிலை அடைவதற்கு முன்பே இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டுகிறோம். சன்னிதியில் அதிக நேரம் (காலத்தை) கழிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருப்பதனால் தான் கோவில் உத்தியோகஸ்தர்கள் பக்தர்களை அவசரப் படுத்த வேண்டி வருகிறது. யாத்திரிகர்களிடம் நன்றாக நடந்து கொள்ளும்படி உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. தவறுகளைத் திருத்தும் முயற்சி செய்து வருகிறோம். ஆனாலும் உத்தியோகஸ்தர்களின் முரட்டு நடைமுறையைப் பற்றிய குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருக்கிறது. அந்த ஸந்தர்ப்பங்களில் என் மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், உத்தியோகஸ்தர்கள் இடைவேளையின்றி இரவும், பகலும் வேலை செய்ய வேண்டி இருப்பதால் தங்கள் பொறுமையை இழந்து விடுவதற்கு அவகாசம் இருக்கும்

என்பதை பக்தர்களும் கவனிக்கும்படி பிரார்த்திக்கிறேன். இப்பொழுது யாத்திரிகர்களின் "க்யூ" வரிசைகளில் இன்னும் செய்யத்தக்க இதர சௌகர்யங்களைப் பற்றிக் கோவிலின் நிர்மாணத்தை முன்னிட்டு இந்த "க்யூ" வரிசைகளை எவ்வாறு சீர்படுத்த வேண்டுமென்பதையும் யாத்திரிகர்கள் கவனித்து தங்கள் ஆலோசனைகளை, என் முகவரிக்கு எழுதி அனுப்பினால் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளமுடியும்.

இதைப் போலவே 15,000 அல்லது 20,000 யாத்திரிகர்களின் சாப்பாடு, ஓய்வு சௌகரியங்களைப் பற்றிய பிரச்னை. இவ் விஷயத்தில் தேவஸ்தானம் நடத்தும் சாப்பாடு, சிற்றுண்டி சாலைகளில், சாப்பாடுப் பொட்டலங்கள் அளிக்கும் ஏற்பாடு எப்படி இருக்கும் எனபதை பரிசீலித்து, அவரவர்களின் கருத்துக்களைத் தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும். இவ்விஷயத்தில் யாத்திரிகர்கள்தான் எங்களுக்கு வழிகாட்டிகள்.

இனி கல்யாண உற்சவத்தைப்பற்றிச் சற்று கவனிப்போம். இது சாதாரணமாக கல்யாணக் மண்டபத்தில் பகல் வேளையில் நடக்கும். இந்த மண்டபத்தில் ஒவ்வொன்றுக்கு 12 பேர் வீதம் 20 கல்யாண உற்சவங்கள்தான் நடத்தமுடியும். ஆனால் தினசரி 25 லிருந்து 30 கல்யாண உற்சவங்கள் நடத்தும்படி வற்புறுத்தப் படுகிறது கடைசி நிமிடத்தில் வந்து கல்யாண உற்சவம் நடத்துமாறு வற்புறுத்தி, ஒருவேளை அந்த வேண்டுகோளை மறுத்தால், எவ்வளவோ தூரத்திலிருந்து வந்துகூட கல்யாண உற்சவம் நடத்த முடியவில்லையே என வருத்தப்படுகிறார்கள். அவர்களின் விருப்பப்படி நடத்தினால் கல்யாண மண்டபத்தில் கூட்டம் அதிகமாகி விடும். முதலில் அவர்களின் (பக்தர்களின்) விருப்பத்தை மறுத்தாலும் பிறகு உடன்பட்டுக் கல்யாண உற்சவம் நடத்திய சந்தர்ப்பங்களில் இந்த பக்தர்களே வசதிகள் சரியாக இல்லை எனவும் குற்றம் சாட்டுகிறார்கள். சகஸ்ரகலசாபிஷேக விஷயத்திலும் இப்படித்தான். அதனால் கல்யாண உற்சவத்தை ஒருநாளுக்கு 20 மாத்திரம் செய்ய இயலும், ஒரு வாரத்திற்குமுன் தெரியப்படுத்தினால்தான் கல்யாண உற்சவம் நடத்த முடியும் என்று சொன்னால்தான் நன்றாக இருக்கும் என நினைக்கிறேன். அப்படிச் செய்தால் சகஸ்ரகலசாபிஷேகமும், கல்யாண உற்சவங்களும் தேவஸ்தானம் நிச்சயித்த தேதிகளில்


தான் நடக்கும். இந்த விஷயத்தில் பக்தர்களின் அபிப்பிராயங்களை அறிய விரும்புகிறேன். கடைசி முடிவு எடுக்கும்வரை பக்தர்கள் தங்கள் அபிப்பிராயங்களை ''காரிய நிர்வாகத்தின் அதிகாரி, திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுமென்றும், எந்த நாளிலும் 20 கல்யாண உற்சவங்களுக்கு மேல், கல்யாண உற்சவங்களை நடத்துவதற்கு அனுமதிகேட்டு அதிகாரிகளை வற்புறுத்த வேண்டாம் என்றும் இதன் மூலம் பக்தர்களை வேண்டுகிறேன்.

இதைப்போலவே நாணயங்களை எண்ணும் (பரகாமணி) காரியம் கூட மிகவும் கடினமாக இருக்கிறது. நாணயங்கள் எல்லாவற்றையும் தனித்தனியாக வேறு படுத்தும் இயந்திரம் ஏதாவது இருந்தால் நன்றாக இருக்கும். இதற்குமுன்பு அமெரிக்காவிலிருந்து வரவழைத்த நாணயங்களை வேறுபடுததும் இயந்திரம், நம் நாட்டு நாணயங்களுக்கு உபயோகமற்றதாகி விட்டது, இந்த நாணயங்களை வேறு படுத்தும் இயந்திரம் ஏதாவது இருந்தால் (நாணயங்களின் எடை, இனம் ஆகியவைகளை) கவனித்துத் தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தினமும் ஆயிரக் கணக்கில் வரும் சின்னச் சின்ன நாணயங்களை இயந்திரத்தினால் வேறுபடுத்துவதால் கால தாமதத்தையும், கஷ்டத்தையும் போக்கலாம்.

திருப்பதிக்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருவது ஸ்ரீனிவாசப் பெருமானுடைய அபூர்வக்கவர்ச்சிதான் காரணமென நான் நம்புகிறேன். பக்தர்கள் எல்லோரும் மேற்கண்ட விஷயங்களை விரிவாகப் பரிசீலித்து தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்து, எங்களுடன் ஒத்துழைத்து உதவவேண்டுமென்பது என் அவா, வேண்டுகோள்.

(தமிழாக்கம்: குமாரி. இ. சி புஷ்பவல்லி, திருப்பதி.)





"வேண்டுதல் விருத்தம்"

மாயாழ்வார்.

—※※※※—

1. கறவைகள் மேய்க்கின்ற கண்ணா! வேங்கடவா!
உறவினர் ஒருவரிலேன் நண்பர்கள் எவருமிலேன்
திறமையும் இல்லேன் நான் செய்வதை அறியேனே
பறவையாம் நின்மலைமேல் பாடவும் அருள்வாயே!

2. பழியேதும் இல்லாது வாழ்குலத்துள் வந்தவனே!
வழிவழியாய் உனைவணங்கும் மரபுள்ளேன் ஆவேனே
மொழிகுளறி நிலைமறந்து முடிவதற்குள் உன்மலைமேல்
வழியாக நான்கிடந்து மகிழ்ந்திடவும் அருள்வாயே!

3. தணியாத தாகத்தைத் தணிக்கும் பெருமானே!
பணியாரும் சேடனெனும் படுக்கை யுடையானே!
அணிசேரும் சோலையுடை அரியதிரு வேங்கடத்துள்
மணியாய்க் கிடந்துனது வளர்புகழைப் பரப்பேனோ?

4. சீரோங்கு திருமலைமேல் செல்வா! வேங்கடவா!
பாரோங்கு தலங்களுக்குள் பரவசத்தை அருளமலையாய்
நேரோங்கி நிற்கின்ற நெடியமலை இருப்பவனே!
நீராகிச் சுனைக்குள்ளே நிலைபெறவும் அருள்வாயே!

5. கண்டவர்கள் கைக்கூப்பித் தொழுகின்ற கார்வண்ணா!
எண்டிசையும் உன்புகழே இயம்புவதைக் கேளாயோ?
அண்டர்களும் முனிவர்களும் அதிசயிக்க நிரம்பிவழி
உண்டியாய் நானிருந்து உன்பெருமை காணேனோ?

6. குன்றுரும் ஏழுமலை கோவிந்தா! கோபாலா!
என்றேனும் ஓர்நாளில் ஏழுமலை ஏறுகின்ற
நன்றுருகும் பயணத்தில் நானும் கலந்துன்பால்
சென்றுவரும் அடியாராம் திருவுடையனுவேனே!

7. சுரமாக இருப்பவரும் சுனைமூழ்கி எழுவாரேல்
உரமான உடம்போடு உனைவணங்கி வருவாரே
வரவேண்டி நாடோறும் வந்தருளும் மாமலைமேல்
மரமாக நாளிருந்து மலர்பூக்க வல்லேனே!

8. சோலைகள் சூழ்ந்துள்ள தூயதிரு வேங்கடவா!
காலையில் சூரியனின் கதிர்வணங்கும் மாமலைமேல்
ஞாலமெல்லாம் பணிந்தேத்த நலமருள வந்தவநின்
மாலையாய்க் கிடந்து மகிழ்ந்திருக்க மாட்டேனோ?

9. ஆர்த்தொலிக்கும் சங்கம் இடக்கையில் அமைந்தவனே!
நேர்த்தியாய் அலங்கார நிலைகொள்ளும் பெருமானே!
வேர்த்துநான் மயக்கமுற விடவேண்டாம் உன்னருளால்
தீர்த்தமாம் வடிவெய்தித் திளைத்திடவும் அருள்வாயே!

10. பிணியேதும் இல்லாத பெருவாழ்வைத் தருபவனே!
கணிச்சியுடைக் காலனவன் கையகத்துச் சிக்காமல்
மணிக்கழுத்தை மலர்க்கரத்தை வடிவத்தை மன்றக்கின்ற
அணிகலனுய்த் தழுவுகின்ற ஆசை பெரிதுடையேனே!

★

கவனிக்கவும்

மணியாடர் கூபனில் (Money Orders) சந்தா தொகை அனுப்பும்போது, சந்தா நெம்பரை குறித்து அனுப்பவும். சந்தாதாரர்கள் தங்களுடைய நம்பரை தேவஸ்தான மாத வெளியீடு உறையில் (Cover) கவனிக்கவும்

முக்கவி கம்ப காப்பியம்

—: ஸ்ரீ. T. G. அனந்த சுப்ரமண்யம். :—
(காபோபான்)

அயோத்யா காண்டம்

★ ★ ★

(முன்தொடா)

இவ்விஷயம மற்ற இராமாயணங்களில் காணப்படவில்லை. பெண்களைப் பற்றி ஒரு அறிஞர் கூறுகிறார்.

“मुखं पद्मदलाकारं वाचश्चामृतशीतलाः ।
हृदयं क्षुरधाराभं स्त्रीणां को वेद चेष्टितम् ॥”

மேல் ச்லோகத்தின் கருத்து: கூனி போன்ற பெண்களுக்கே பொறுத்தமாகும். மேலும் கைகேயி கூறுகிறாள்: ஸூர்யவம்ச அரசர்கள் கையாண்டு வரும் முறை மூத்த பிள்ளையை எஜமானனாகவும், சிறிய பிள்ளைகளை ஸேவகனாகவும் கருதுவதென்பது, இந்தக் கருத்தை மனுஸ்மிருதி கூறுகிறது-

“ज्येष्ठ एव तु गृह्णीयात् पित्र्यं धनमशेषतः ।
शेषस्तमुपजीवेयुर्यथैव पितरं तथा ॥” என்று

ஆகையால் ராமன் முடி சூட்டிக் கொள்வதே சாலச் சிறந்த தோடல்லாமல், அவன் தகுதியும், முறையுமுடையவன். எனக்கு ராமனும் ஒன்றே, பரதனும் ஒன்றே என்று கூறுகிறாள்.

காளிதாஸன் “स्त्रीणां अशिक्षित पटुत्वम्” என்று கூறுகிறான். இதற்குப் பொருள் “பெண்களுக்கு ஒருவராலும் கற்பிக்கப்படாததான சில சாமர்த்யங்கள் உண்டு” என்பது. ஆகையால் மந்தரை இவ்வளவையும் பொருமையாகக் கேட்டுக் கொணடிருந்து விட்டு, கைகேயியின் மனத்தைக் கலைத்து விட்டாள். எப்படிமானைப் பிடிக்க வேடன் குழல் முதலான இசைக் கருவிகளை ஊதிப் பிடிக்கிறானோ, அதே போல் கூனி கைகேயியைத் தன் சாகஸ, இன்பமான வார்த்தைகளைக் கொண்டு வசமாக்கிக் கொண்டு பரதன் மேல் சபதம் செய்யச் சொல்லித தன் காரியத்தை முடித்துக் கொண்டாள்.

"கைகேயி! முடிவாகச் சொல்லுகிறேன், ராமன் அரசனாக ஆனானே; நீயும், பரதனும் அவர்களுக்குப் பணிவிடை செய்யும் காலம் வந்துவிடும். அதற்குப்பிறகு நானும் அடிமையாக வேண்டியதுதான். எப்படி கத்ரூ விநதையை ஆட்டி வைத்தாளோ? அதே போல் கௌஸல்யை உன்னை ஆட்டி வைப்பாள் என்று சக்களத்திப் போராட்டத்தைக் கிளறி விட்டாள்". இவ்விதம் கூறிய பிறகு கைகேயி கூனியைப் பார்த்து உபாயம் கேட்கிறாள்.

மந்தரை கைகேயிக்கு வழி சொல்லிக் கொடுக்கிறாள். முன்னொரு காலத்தில் சம்பராஸுரயுத்தம் நடந்த பொழுது நீ உன் கணவனுக்கு உதவி செய்தாயல்லவா? அப்பொழுது அவர் உனக்கு இரண்டு வரங்கள் கொடுக்கிறேன் என்று சொன்னார் அல்லவா? ஆகையால் அந்த வரங்களை இந்தச் சந்தர்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு கேட்டு வாங்கிக் கொள். அதற்கு வேண்டிய வரங்களின் விபரத்தையும் கூறுகிறேன் கேள்!

"तौ च याचस्व भर्तारं भरतस्याभिषेचनम् ।
प्राव्राजनं च रामस्य वर्षाणि च चतुर्दश ॥
क्रोधागारं प्रविश्याद्य क्रुद्धेवाश्वपतेः सुते ।
शेष्वानन्तर्हितायां त्वं भूमौ मलिनवासिनी ॥
मास्मैनं प्रत्युदीक्षेथा माचैनमभिभाषथाः ।
रुदन्ती पार्थिवं दृष्ट्वा जगत्यां शोकलालसा ॥ "

"கைகேயி! அந்த இரண்டு வரங்களை இவ்விதம் கேள்; அதாவது ஒன்று பரதனுக்குப் பட்டம் சூட்டப்படவேண்டும், மற்றொன்று ராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வஸிக்க வேண்டும் என்று. மேலும் உனக்கு கோபம் வந்தால் படுக்கக் கூடிய மாளிகைக்குச் சென்று கோபம் அடைந்தவள் போல் பூமியில் அழுக்கடைந்த ஆடையுடன் படுத்துக் கொள். அரசன் வந்தால் பார்க்காதே! பேசாதே!! அழுது கொண்டு கவனியாமல் இரு" என்றும் கூறுகிறாள்.

கம்பர் மந்தரையின் சூழ்ச்சியைக் கூறும் பொழுது கைகேயினிடம் வரங்களை மட்டும் கேளென்று கூறியதோடு நிறுத்திக் கொண்டார். மந்தரையே க்ரோதாகாரத்திற்குச் சென்று

அங்கு படுத்துக்கொள் என்று வால்மீகி கூறியவாறு கம்பர் சொல்லவில்லை.

தலைமயிரை அவிழ்த்து விட்டுக் கொண்டும், மலர்களைக் கண்டபடி வாரி இறைத்தும், உடைகளைக் களைத்துக் கொண்டும், புழுதியில் புரண்டும், தரையில் கிடப்பவளாகவும் கம்பர் கூறுகிறார். வால்மீகத்தை அனுஸரித்தே அத்யாத்மராமாயணம் சென்றிருக்கிறது.

கைகேயி கோபக் கூடத்தில் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தசரதன் அவளை பலவிதமான இன்பச் சொற்களால் வினவுகிறான்.

"बलमात्मनि जानन्ती न मां शङ्कितुमर्हसि ।
न मया सत्कृता देवी सत्कारार्हा कृते तव ॥
इदानीं तत्तपति मां यन्मया सुकृतं त्वयि ।
अहंच हि मदीयाश्च सर्वे तव वशानुगाः ॥
न ते किञ्चिदभिप्रायं व्याहन्तुमहमुत्सहे ।"

பிரியே! என்னிடம் ஏன்? சந்தேகப்படுகிறாய்? நீ எல்லோரைக் காட்டிலும் மேலானவள். உனக்குத்தான் எல்லோரும் பணிவிடை செய்யவேண்டும். நானும் மற்றவர்களும் உனக்குக் கட்டுப்பட்டவர்களே தவிர நீ யாருக்கும் கட்டுப்பட்டவளல்ல; மேலும் உன் விருப்பத்தை நான் முறியடிக்க விரும்பவில்லை என்ன? உன் அபிப்ராயத்தைக் கூறுவாய் என்று தசரதன் கேட்கிறான் என்று வால்மீகி கூறுகிறார்.

இதே அபிப்ராயத்தை அத்யாத்மராமாயணத்திலும் பார்க்கலாம்.

"जानासि त्वं मम स्वान्तं प्रियं मां स्ववशेस्थितम् ।
तथापि मां खेदयसे वृथा तव परिश्रमः ॥ என்று

துளஸீதாஸரும்:—

"जानासि मोर सुभाउ बरोरूँ ।
परिजन प्रजासकल बस तोरें ॥" என்று கூறுகிறார்.

கம்பரோவெனில் சுருக்கமாக முடித்துக் கொண்டு விட்டார்.

'' உன்னை இகழ்ந்தவர் மாள்வர்; உற்றது எல்லாம் ''
'' சொன்னை பின் என் செயல் காண்டி!
சொல்லிடு! '' என்றான்

உன்னை இகழ்ந்தவர் உளராயின் அவர் மாய்வர், நிகழ்ந்தது என்னவென்று கூறு. அதற்குப் பிறகு என் செயலைக் காண்பாய்! விரைந்து சொல், என்றான்.

இதைக் கேட்ட கைகேயி.

'' உண்டு கொலாம் அருள் என் கண்?
உன் கண் ஒக்கில்
பண்டைய இன்று பரிந்து அளித்தி '' என்றாள்

வேந்தே! தங்களுக்கு என்மேல் அருள் உண்டு என்றால் பண்டு தந்தனவற்றை இன்று எனக்கு அன்புடன் அளித்திடுக என்று கூறினாள். தசரதன் கொஞ்சம் அவசரப்பட்டுத் தரு-கிறேன் எனக் கூறும்பொழுது.

'' உள்ளம் உவந்து அது செய்வென்; ஒன்று லோவேன்
வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை '' என்றான்

உன் மைந்தன் ராமன் ஆணைமேல் தருகிறேன் என்று கூறியதை கைகேயி நன்கு பிடித்துக் கொண்டாள். ஆனால் அவ் வாக்யத்தில் ''உன் மைந்தன் ராமன்'' என்பதைத் தான் மறந்து விட்டாள். தான் கேட்க வேண்டியவற்றைக் கேட்கிறாள்.

'' ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்
சேய் அரசு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது; எனப் புகழ்ந்து நின்றாள் ''

கம்பர் கைகேயியைப் பற்றிக் கூறுகிறார்.

'' தீயவை யானவையினும் சிறந்த தீயாள் ''

என்று. கொடுமைக்கும் கொடுமையானவள் என்று.

கைகேயி கேட்கும் வரங்களில் ஒன்று ''தன் சேய்'' என்று குறிப்பிட்டும், மற்றொன்றில் ''சீதை கேள்வன்'' என்று கூறுகிறாள். தசரதன் கூறியதற்கும், கைகேயி கூறியதற்கும் எவ்வளவு வித்யாசம் இருக்கிறது பாருங்கள்.

வால்மீகி கொஞ்சம் நிதானமாகவே செல்கிறார்.

"मनुजो मनुजव्याघ्राद्रामादन्यो न विद्यते ।
तेनाजय्येन मुख्येन राघवेन महात्मना ।।
शपे ते जीवनार्हेण ब्रूहि यन्मनसेप्सितम् ।
तेन रामेण कैकेयि ! शपे ते वचनक्रियाम् ।।

இங்கு தசரதன் ராமனைப் புகழ்ந்து அவனைக் காட்டிலும் வேறொருவரும் உலகில் இல்லை, ஆகையால் உத்தம வீரனை அவன்மேல் ஆணையிடுகிறேன் என்று கூறி நீ கேட்பதைக் கட்டாயமாகத் தருகிறேன், என்று கம்பர் கூறுமபொழுது "உன் மைந்தன் ராமன்" என்று கூறினார். வால்மீகி அவ்விதம் கூறவில்லை. உலகிற்கே உத்தமன் ராமன் அவன்மேல் ஆணையிடுகிறேன் என்று இருமுறைக் கூறுகிறான். காமத்தால் கட்டுண்ட தசரதன் என்ன செய்வதென்பது அறியாது உளரி விடுகிறான்.

தியாகராஜஸ்வாமி ராமனைக் கூறும் பொழுது.

"நினுவினா அன்ய தைவமு கோரமு,
வரகுணா ராஜாதி ராஜ ராம"

"புடமிலோ ஜனுலெல்ல பொகட"

என்று கூறுகிறார். அதாவது ராமன் எத்தகைய பெருமை வாய்ந்தவன் என்பதை ஸ்வாமிகள் அடிக்கடிச் சொல்லி மகிழ்வார். அத்தகைய பெருமை வாய்ந்த ராமனின் மேல் ஆணை என்று கூறுகிறான் தசரதன்.

அத்யாத்ம ராமாயணத்தில்

"मम प्रणात्प्रियतरो रामो राजीवलोचनः ।
तस्योपरि शपे ब्रूहि त्वद्धितं तत्करोम्यहम् ।।"

உயிரைக் காட்டிலும் மேன்மையானவன் ராமன். அவன் பெயரில் சபதம் செய்கிறேன். உன் விருப்பத்தைச் செய்கிறேன் கேள்; என்று துளசிதாஸரும் வால்மீகியைப் பின்பற்றியே சென்றிருக்கிறார்.

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

—✱✱O✱✱—

ஸப்தகிரி மாத இதழ் சந்தா தாரர்களில் கீழே கொடுக்கப் பட்டுள்ள எண்களின் சநதாகாலம் 31-8-71 வுடன் முடிவடை வதால் இவர்களின் சந்தா தொகையை விரைவாக அனுப்பா விடில் இவர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும். ஆகையால் சந்தாதாரர்கள் இந்த விஷயத்தை கவனித்து தங்களுடைய சந்தா தொகையை விரைவாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

T14; T138; T329; T350; T372; T374; T468; T469, T470; T476; T626; T631; T632; T635; T639; T640; T832, T884; T986; T987; T989; T990; T991; T993; T994; T995; T996; T997; T998; T999; T1001; T1002; T1003; T1004: T1005; T1006; T1007; T1008; T1009; T1010; T1011; T1012; T1013; T1014; T1015; T1016; T1017; T1018, T1019; T1020; T1021; T1030; T1073;

மாத இதழுக்கு சம்பந்தப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, ''ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி. (A. P)'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கு அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு இந்த அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று அறிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்.



"கடவுள் உண்டா!"

—: ஸ்ரீ. சி வி. சிவராமகிருஷ்ணன், கிருஷ்ணகிரி :—

——(*)——

கடவுள் உண்டா, இல்லையா? - என்ற கேள்வி இன்று நேற்றல்ல, மனித இனம் அறிவிலே முன்னேற்றம் பெறத் துவங்கிய காலத்திலிருந்தே நாகரீகத்தின் தொடக்கக் காலத்திலிருந்தே கேட்கப்பட்டு வந்த ஒரு கேள்வி. 'உண்டு' என்று அச்சத்தால் நம்பி வந்தோர் சிலர்: அப்போது அவர்களுக்கு ஆய்ந்தறியும் திறம் மிகக் குறைந்திருந்தது: அறிவு விரியாத குழப்ப நிலையில் இருந்தது.

உணர்ந்து உண்டென்று சொன்னவர்களும் உண்டு. இவர்கள் அறிவும் அனுபூதியும் பெற்று அன்றுடம் அவர்கள் உண்டென்று நம்பிய அந்த இறைவனை, கடவுளை மெய்யுருக மனம் கரைய வழிபட்டு வந்தவர்கள்.

இல்லை என்று ஆணித்தரமாக நம்பியவர்களின் விஞ்ஞான பூர்வமான வாதமோ, "அனைத்தும் இயற்கையே, இயற்கைக்கு மீறிய சக்தி ஒன்று இல்லை; மனிதன் காடுகளிலும், குகைகளிலும் மிருகங்களோடு மிருகமாக, அந்த மிருகங்களையே வேட்டையாடி அறிவு வளராத நிலையில், இயற்கைச் சக்திகளைக் கண்டு பயந்து பயந்து வாழ்ந்து வந்த காலத்தில்; தன் சக்திக்கு மீறிய இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு நடுநடுங்கி: தன் ஆற்றலுக்கு மீறிய ஏதோ ஒரு சக்திதான் இடி, மின்னல், மழை புயல் போன்ற பயங்கரங்களை ஏவிவிட்டு பயமுறுத்துகிறது என்று நம்பி இயற்கையை வழிபடத் துவங்கினன். இயற்கையை அடக்கக் கற்றபின், அதாவது விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டு, அறிவு ஆராய்ச்சிகள் பெருகிய பின், இயற்கையின், இயக்கப்பாடுகளின் அறிவு ஏற்பட்டபின், மனிதனின் அச்சம் ஒடுங்கி "தனக்கு மீறிய சக்தி என்று ஒன்றுமில்லை, தான் நினைத்தால் இயற்கையை வெற்றி கொண்டு கட்டி ஆளலாம்" என்ற நம்பிக்கை துளிர்த்து 'கடவுள் நம்பிக்கை மூட நம்பிக்கை என்று உணர ஆரம்பித்தான்' என்பதாகும்.

கடவுள் கொள்கையை விஞ்ஞான பூர்வமாகவே ஆராய்ந்து பார்ப்போம்.

1. காரண காரியத் தன்மை (Cause and effect)

இது விஞ்ஞான சாத்திரத்தின் ஆணிவேர். இதன அடிப்படையில்தான் அனைத்து ஆய்வுகளும் நடைபெறுகின்றன. ''காரணமின்றிக காரியம் இல்லை. அதாவது ஒரு காரியம், செயல் நடைபெற்றதென்றால் அதற்கு அடிப்படையான காரணம் ஒன்று இருந்தே தீரும்'' என்பதே விஞ்ஞான சூத்திரம். இதன் அடிப்படையில் கடவுள் கொள்கையை ஆய்ந்து பாரப்போம்; 'அனைத்தும் இயற்கையே, இயற்கைக்கு மீறிய சக்தி ஒன்றில்லை. என்ற வாதத்தை இங்கு சற்று விரிவாகப் பார்ப்போம்

இயற்கை என்பது காரணமா? காரியமா? சலனத்திற்கு உட்பட்டு, உயிர்கொண்டு, வளர்ச்சி தேய்வுகளுக்கு இலக்காகி நிற்பதே காரியம்: அல்லது செயல் எனப்படும். இயற்கையில் உயிர், சலனம், வளர்ச்சி, தேய்வு இவைகள் உண்டு; எனவே இயற்கையைக் காரியம் என்று சொல்லத் தடையில்லை அல்லவா? இயற்கை கார்யத்தின் பாற்பட்டதென்றால், இதற்கு அடிப்படையான, பிரிக்க முடியாத காரணம் ஒன்று இருக்கவேண்டுமல்லவா?

ஆனல், இயற்கையின் தோற்றத்திற்கும், தன்மைக்கும் இன்னமும் தெளிவான காரணங்கள் கண்டறியப்படவில்லை. ''சூரியன் ஏன் வெம்மையாக இருக்கவேண்டும்? சந்திரன் ஏன் தன்மையாக இருக்கவேண்டும்? பூமி ஏன் உருண்டையாக இருக்கவேண்டும்? காற்று ஏன் கட்புலனுகாமல் இருக்கவேண்டும்?'' என்றெல்லால கேட்கும்போது, தெளிவான, உறுதியான, முடிவான பதிலை நாம் பெறுவதில்லை. ஆனல் ''இயற்கையின் இரகசியங்கள் அனைத்தையும் கண்டறிந்து சொல்ல முடியும்'' என்று சொல்லுகின்றனா பௌதீக வாதிகள்; 'கட்டுக் கடங்காத ஒன்றின் தன்மைய ஓர் எல்லைக்கு உட்பட்ட அறிவுகொண்டு அளப்பது எபபடி?'' என்கின்றனர் ஆன்மீக வாதிகள். இது ஒரு புறமிருக்க;

இயற்கை காரியத்தின் பாற்படும் என்று முடிவான பின்னர், அதன் தோற்று வாய்க்குக் காரணத்தை ஆய முனைந்தோர் 'காரணம் தெளிவுபடவில்லை, ஆனல் காரணம் இருப்பதுவோ மெய்' என்கின்றனர்.

காரணம் இருப்பது மெய்யென்றால், அந்தக் காரணத்தைக் கருதிப் பார்த்து படைப்பை நடத்தும் அறிவு ஒன்று இருக்கத் தானே வேண்டும்? அறிவு சூனியத்தில் முளைக்காதல்லவா? எனவே அறிவுக்கு ஆதாரமான பொருள் ஒன்று இருந்தே தீரவேண்டும், அந்த ஆதாரப் பொருளைத்தான் கடவுள் என்றும், பிரம்மமென்றும், பரப்பிரம்மமெனறும் சொல்லுகிறோம். அடுத்து;

2. ''எதிரிடைத தனமை வாய்ந்த இரண்டு சக்திகளின் மோதலே படைப்புக்குக் காரணம்; இதில் கடவுள் பங்கு ஒனறுமில்லை'' என்பது;

இதனைச் சுற்றி ஆய்ந்து பார்ப்போம். இரண்டு சக்திகள் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள் அல்லவா? அந்த இரண்டு சக்திகளைப் படைததது யார்? விஞ்ஞானிகளா? அல்லவே! இந்த சக்திகளைக் கண்டறிந்ததே அவர்கள் வேலை இந்த சக்திகளை எதிரிடைச் சக்திகள் எனறு சொல்லுகிறாகள்; இநத சக்திகளில் எதிரிடைத் தன்மைகளை ஊட்டியவர்களும் அவர்களல்ல மேலும் சக்தி என்று சொன்னாலே அதில் 'சைதன்யம்' உயிர் இருக்கிறது என்று பொருள். அந்த சைதன்யத்தின் பலத்தால் அந்த சக்திகள் இயங்குகின்றன; மோதுகின்றன; படைப்பை நிகழ்த்துகின்றன. இந்த சைதன்யத்தை; உயிரை இங்கு நிறைத்து வைத்தவர்களோ, அன்று உண்டாக்கியவர்களோ விஞ்ஞானிகளல்ல இதன் தன்மையை ஆய்ந்து வெளிப் படுத்தியது அவர்கள் நுண்ணறிவு; அவ்வளவே அவர்கள் பங்கு. அப்படியெனில் உலகத்தில் படைப்புக்குக் காரணமான, இரண்டு எதிரிடைத் தன்மை வாய்ந்த சக்திகளைப் படைத்தது யார்? படைப்புக்கே ஆதாரமான ஒன்றைப் படைத்தது யார்?

3. இயற்கையிலே காணப்படும் சீர்மை (**Harmony In Nature**).

இயற்கையில் எங்கு நோக்கினும் ஒரு சீர்மை விரவி நிற்கிறது. காலை, மாலைகளின் தோற்றமும் ஒடுக்கமும், பருவக் காற்றுகளின் காலக்கிரமம், பூமியின் சுழற்சி, உயிர்களின் வளர்ச்சி, 'விதையொன்று போட சுரையொன்று முளையாமை' முதலியவை இயற்கையில் நாம் காணும் சீர்மைக்கு (ஒழுங்கிற்கு)

சான்றுகளாக நிற்கின்றன. இந்தச் சீர்மையை, திட்டமிட்டது போல் இயற்கையில் வைத்தவன் யார்? இந்தக் காரியங்களுக்குக் காரண புருஷன் யார்?

விஞ்ஞானிகளா! அல்ல; இயற்கையில் விரவி நின்ற சீர்மையை (Harmony) விளக்கினதொன்றே அவர்கள் பணி.

இந்தச் சீர்மை, அறிவின் மிக உயர்ந்த நிலையிலும் கணித்துச் சொல்ல முடியாத பேரறிவின் திட்டம்.

இத்திட்டத்திற்கு மூலபுருஷர், இங்கு வாழ்ந்து வரும் நம்மில் யாருமே அல்லவென்றால், நமக்கு அப்பாற்பட்ட ஒருவராகத்தானே இருக்கவேண்டும்? அவர் கடவுளன்றி வேறுயார்?

4. டார்வின் பரிணாமக் கொள்கை (Evolution Theory)

படைப்பு ஏற்பட்ட பிறகு நடைபெற்ற வளர்ச்சிப் போக்குகளைப் பற்றித்தான் 'டார்வின்' குறிப்பிடுகிறாரே தவிர; உயிர்களின் தோற்று வாய்க்கு அடிப்படைக் காரணம், எதைப் பற்றியும் அவர் ஆய்வு நடத்தவில்லை. இப்படி, அடிப்படையை விட்டு விட்டு நடத்திய ஆய்வில் கண்ட முடிவுகளை நாம் ஏற்ப தெங்ஙனம்? எனவேதான் ஆன்மீகவாதிகள் ''பரிணாமக் கொள்கை ஸரியில்லை'' என்று சொல்லுகிறார்கள்.

பஞ்ச பூதங்களை ஆய்ந்து பார்த்த விஞ்ஞானிகள் அவைகளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளைக் கண்டு வியக்கின்றனர். அணுச்சக்தியை ஆய்ந்து பார்த்து உலகுக்கு வெளிப்படுத்திய மாமேதை ''ஈன்ஸ்டீன்'', பிரிக்க முடியாத மிகச் சிறிய கூறு அணுதான் என்று கூறி; மேலும் மேலும் ஆய்வு நடத்தி அதனையும் மிகச்சிறிய கூறுகளாகப் பகுக்கலாம் என்றார். இப்படிப் பகுத்துப் பார்க்கும்போது அதில் உள்ளடங்கியுள்ள ஆற்றலைக் கண்டு, ஒரு சீரான இயக்கத்தைக் கண்டு வியப்புற்றதாகக் குறிப்பிடுகின்றார். அநதப் பேரறிஞரே வியக்கின்ற அளவுக்கு அணுவில் சக்தியை நிறைத்து வைத்தது யார்?

கோலன்களை சரிந்து விழுந்துவிடாமல், ஈர்ப்புச் சக்தியால் ஒன்றை ஒன்று கவர்ந்து அந்தரத்திலே சுழன்று கொண்டிருக்கச் செய்தது யார்?

மண்ணிலே விதை போடாமலே பயிர் வளர்க்கும் விந்தை மிகு செயல் யாருடையது? சிறிய ஆலம் வித்தில் பிரம்மாண்டமான ஆலமரத்தை அடக்கி வைத்த திறன், யாருடையதுதிறன்?

உயிர என்று சொல்லுகின்றோமே, அதற்கு ஆதாரமான பொருள் எது? இன்னமும் புரியாத புதிர் இது. உயிரின் வடிவமென்ன? பரிமாணமென்ன? இவைகள் இன்னமும் கண்டறியப் படாத மர்மங்கள். இன்பம், துன்பம் என்ற உணர்ச்சிகள், வலி, சுகம் என்ற தன்மைகள் இவற்றின் நுட்பங்கள் இவைகள் இன்னமும் கண்டறிய முடியாத புதிர்கள். கருவிலே 'விந்து' உயிர்ப் பெற்று தாயையோ, தந்தையையோ அப்படியே உரித்து வைக்கிறதே அந்த விந்தையின் மூலம் ஏது?

இப்படி எத்தனையோ செய்திகள் அறிவுக்குப் புலனாகாத விநதைகள் 'நம்மை மீறிய சக்தியொன்று, படைப்புக்குக் காரணமாகி, படைப்பை ஆண்டு வருகிறது' என்று புரிய வைக்கிறது அல்லவா?

நம் நாட்டில் கடவுள் அனுபூதி, பெற்ற மேலோர்கள், மிகச் சமீப காலத்திலும் வாழ்ந்து வந்தார்கள் — ஏன் — இன்றும் அத்தகைய மேலோர்கள் உண்டு. இராமகிருஷ்ணபரமஹம்சர், பராசக்தியைச் சந்திப்பதை, அவனிடத்துப் பேசுவதை குழந்தை, அன்னையிடம் பேசுகின்ற தன்மைபோல் மிக எளிதாக ஆக்கிக் கொண்டிருந்தார். கடவுள் கொள்கையில் நம்பிக்கையற்றிருந்த விவேகானந்தரையே; கடவுளைக் காட்டிச் சமாதானப்படுத்திய மகான் அவர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் இவர்களின் அனுபூதிச் செல்வத்தை நாம் மறுத்துவிட முடியுமா?

இவ்வளவேன்? கலியுகத் தெய்வம், கண் கண்ட கடவுள் என்றெல்லாம் பக்தர்களால் பரவப்படும், வேங்கடவனின் திருமலை நாடி, லட்சக் கணக்கான பேர் நாள் தோறும் ஆர்வத்தோடு வருகின்றார்களே, அவர்களென்ன பேதைகளா? அல்லது பொழுது போக்க வந்தவர்களா? இல்லை! தங்கள் குறை தீர்த்த; குன்றமர்ந்த பெம்மானைக் கும்பிட்டுக்களிக்க, பிரார்த்தனைக்குப் பலன் தந்த பரந்தாமனைச் சேவிக்க வந்தவர்கள்; பலன பெற்றதால் பரவ வந்தவர்கள். வேங்கடேசனின் எழில் கொழிக்கும் திருவடிவைத் தரிசிக்க வந்த அனுபூதிமான்கள்.

உருவ வழிபாட்டிற்கு எதிர்ப்பு, பிறந்து வளர்ந்து வந்ததை நாம் அறிவோம்! இதையும் சற்று விளங்கக் காண்போம்.

உயர்ந்த தெய்விகத் தத்துவங்களுக்கு தரப்பட்ட வடிவங்களே இறைவடிவங்கள். இறைவன் தத்துவ வடிவினன். அண்டமெல்லாம் அவனே ஆகி நிற்கும்போது அவனுக்கென்று தனி வடிவத்தைக் கற்பிப்பது எங்ஙனம்? முடியாதுதான் என்றாலும், பாமரர்களின் உள்ளத்தில் கட்புலனாகா இறைத்தத்துவத்துக்கு வடிவம் கற்பித்துச் சொன்னால் நன்குபதியும் என்பது மேலோர் அனுபவம்; துணிபு. எனவே; 'விநாயகர், இராமன், சிவன், முருகன் என்றெல்லாம் சொல்லப்படும் இறைவடிவங்கள் அந்த இறைமையின் வடிவங்கள்' என்பதை உணர வேண்டும்.

ஸத்சித் ஆனந்தம் என்று இறைவனை மேலோர் பரவிய நெறியே இதற்குச் சான்று.

ஸத்-அறியாத, சித்-அறிவுவடிவமான, ஆனந்தம்-இன்பப் பொருள் (அறியாத அறிவு வடிவமான இன்பப் பொருள்) இதற்கு நாம் வடிவம் தரும்போது மென்மையும், உயர்ந்த கற்பனையும்; ஒழுக்கத்திற்கு முரண்படாத நெறியும் நமக்குத் துணை நிற்கின்றன. இதனையே மேலோர், 'ஏகம் சத்-விப்ரா: பஹுதா வதந்தி-ஒரே பரம் பொருள் அதனை பண்டிதர்கள் பலவாறாக மொழிகின்னர்;' என்று சொன்னார்கள்.

முடிவாக; கடவுள் உண்டா என்ற கேள்விக்கு சிறந்த ஆய்வு நடத்தி. விஞ்ஞான பூர்வமாகப் பார்த்தாலும் உண்டு என்றே விடை விருகிறது. உண்டென்பது நமது மரபு. இந்த நம்பிக்கையில்தான் நமது உயிர்நிலை இருக்கிறது; நமது துன்பங்களுக்குத் தீர்வு மிருக்கிறது. எனவே, 'கடவுள் உண்டா'? என்ற வினாவிற்கு உறுதியாக 'உண்டு என்பதே விடையாகும்.



ஸ்ரீ:

தைத்ரீய ஆரண்யகம்

तैत्तरीयारण्यकम् ॥

(சூரிய நமஸ்காரம்)

—: வித்துவான் ஸ்ரீ. நடாதூரா. தேசிகாசசாரி. :—

★ ★ ★

(முணிதொடா)

அனுவாகம் - 1

१. अक्षिदुःखोत्थितस्यैव । विप्रसन्ने कनीनिके ।
आङ्क्ते चाद्गणं नास्ति । ऋभूणां तन्निबोधत ॥

அக்ஷிதுக்கோத்திதஸ்யைவ| விப்ரஸன்னே கனீனிகே|
ஆங்க்தே சாத்கணம் நாஸ்தி| ருபூணாம் தந் நிபோதத ||க||

சரத் காலம்

அக்ஷிதுக்கோத்திதஸ்ய — கண் நோயிலிருந்து விடுபட்ட மனிதர்களின், கனீனிகே — கருவிழிகள், ஏவ — எவ்விதம், விப்ரஸன்னே — தெளிவாக விளங்குமோ, அவ்விதமே உலகமும் இலையுதிற்காலத்தில் தெளிவாக விளங்குகிறது. ஆங்க்தேச — ஜனங்கள் கண்களில் மையிட்டுக் கொள்கிறார்கள். அத்கணம் நாஸ்தி-பார்வையைத் தடுக்கும் கண்ணீர் முதலியவைகள் இல்லை. தத்—அவைகள் எல்லாம், ருபூணம் — ருபு என்கிற தேவர்களின் சக்தியினால் ஏற்பட்டவை என்று, நிபோதத — அறியுங்கள்.

மழைகாலத்தில் ஆகாயத்தில் மேகம் சூழ்ந்தும், பூமி முழுவதும் மழை பெய்ததால் சேரும் அழுக்கும் நிறைந்ததாகவும், நடப்பவர்களுக்கு கஷ்டம் தருவதாகவும், எங்கும் காணுவதற்கு வெறுப்பைத் தரக் கூடியதாகவும் இருந்தது. இந்த சாத் காலம் என்கிற இலையுதிற்காலம் வந்ததும், மஞ்சட் காமாலை வந்தவனுக்கு அந்த நோய் நீங்கின பிறகு எவ்விதம் எல்லாப் பொருள்களும் தெளிவாகத் தெரியுமோ, அவ்விதமே பூமியில் எங்கும் பார்ப்பதற்கு இன்பம் தரும் காட்சிகளாக உள்ளன

மழைக்காலத்தில் வந்த மஞ்சட் காமாலை இலையுதிற்காலத்தில் நீங்கி விடுவதால், கண்ணீர் முதலியவை இன்றி மக்கள் பொருள் களை நன்றாகப் பார்க்கின்றனர். மேலும், மக்கள் தமது கண்களை மையிட்டு அழகு செய்து கொள்கின்றனர். இந்த நற்காரியங் கள் யாவையும், இந்த சரத்காலத்தில் சூரியனுடன் சஞ்சாரம் செய்யும் ''ருபு'' என்கிற தேவர்களின் மஹிமையினால் தான் என்பதை அறிய வேண்டும்.

२. कनकाभानि वासांसि । अहतानि निबोधत ।
अन्नमश्नीत मृज्मीत । अहं वो जीवनप्रदः ।

கனகாபானி வாஸாம்ஸி| அஹதானி நிபோதத|
அன்னம்அச்னீத ம்ருஜமீத| அஹம்வோ ஜீவனபரதஃ ||உ||

வாஸாம்ஸி — ருபுக்களின் ஆடைகள், கனகாபானி — பொன் நிறமுள்ளவைகள் என்றும், அஹதானி — புதியவைகள் என்றும், நிபோதத — அறியுங்கள். அன்னம் — உணவை, அச்னீத — அருந் துங்கள், ம்ருஜ்மீத — சுத்திசெய்து கொள்ளுங்கள். அஹம் — நான், வஃ — உங்களுக்கு, ஜீவனப்ரத; — நல்லுணவுடன் நல் வாழ்க்கையையும் அளிக்கிறேன்.

३. एता वाचः प्रयुज्यन्ते । शरद्यत्रोपदृश्यते ।

ஏதா வாசஃ பரயுஜ்யந்தே| சரத்யத்ரோபத்ருச்யதே ||ந||

யத்ர — எக்காலத்தில், சரத் — இலையுதிற்காலம், உபத்ரு ச்யதே — காணப்படுகிறதோ, ஏதா வாசஃ — அக்காலத்தில் இத் தகைய சொற்களை மக்கள் சொல்கின்றனர்.

இலையுதிற்காலத்தில், சூரியனுடன் சஞ்சாரம் செய்யும் ''ருபு'' என்கிற தேவர்கள் பொன்னிறமான ஆடைகளை அணிந் திருக்கின்றனர். இந்த பருவத்தில் மக்கள் அதிகமாக உணவு அருந்துகிறார்கள், மழைகாலத்தில் துனபப்படுவதுபோல், துன்பப் படுவதில்லை. உணவுப் பொருள்கள் எங்கும் அமிதமாய்க் கிடைக்கின்றன. ஆகையால் மக்கள் விருந்தினர்களை அழைத்து, ''கை கால்களை சுத்தி செய்துகொண்டு நீங்கள் விரும்பும் வரையில் அன்னம் அருந்துங்கள்'', என்று தாராளமாக உப சரிக்கின்றனர். அத்தகைய பெருமை வாய்ந்தது இந்த சரத்காலம்.

४ अभिधून्वन्तोऽभिघ्नन्त इव । वातवन्तो मरुद्गणः ।।

அபிதூன்வந்தோ அபிக்னந்த் இவ| வாதவந்தோ
மருத்கணாঃ ||ச||

ஹேமந்த காலம்

மருத்கணா: — ''மருத்'' என்கிற தேவர்களின் கூட்டங்கள், வாதவந்தঃ — பனிக்காற்றை வீசி, அபிதூன்வந்தঃ இவ — எல்லாப் பிராணிகளையும் நடுங்கும்படி செய்பவைகள் போலும், அபிக்னந்தঃ இவ — அடித்துத் துன்புறுத்துபவைகள் போலும் காணப்படுகின்றன.

ஹேமந்தருது என்கிற முன் பனிக்காலத்தில், கடுமையான பனிக்காற்று வீசுகின்றது. அதனால் பிராணிகளின் கைகளும் கால்களும் நடுங்குகின்றன. அதனால் இக்காலத்தில், ''மருத்'' என்கிற தேவர்கள் பிராணிகளைப் பனிக்காற்றாகிற அம்பை எய்து மிகவும் துன்புறுத்துகிறவர்கள் போல் காணப்படுகின்றனர் என்று வருணிக்கபபட்டது.

५. अमुतो जेतुमिषुमुखमिव । सन्नद्धाः सह ददृशेह ।
अपध्वस्तैर्वस्तिवर्णैरिव । विशिखासः कपर्दिनः ।।

அமுதோ ஜேதுமிஷுமுகமிவ| ஸந்நத்தாঃ ஸஹ தத்ருசேஹ|
அபத்வஸ்தைঃ வஸ்திவர்ணைঃ இவ| விசிகாஸঃ கபர்தினঃ ||ரு||

விசிகாஸঃ — பலவித குடுமியுள்ளவர்களும், கபர்தினঃ தலையில சடை தரித்தவர்களுமான ஜனங்கள், அமுதঃ — வாயு லோகத்திலிருந்து ஏவபபட்ட, இஷுமுகம் — அம்பின் நுனியை, ஜேதும் இவ—தமது உடலில் படாமல் தடுப்பதற்காகவே போல், அபத்வஸ்தைঃ — அழுக்கடைந்த, வஸ்திவர்ணைঃ இவ — ஆட்டின் நிறமுள்ள சட்டையை, ஸந்நத்தாঃ— அணிந்த ஜனங்கள், ஸஹ— கூட்டமாக, தத்ருசேஹ — காணப்படுகின்றனர்.

முன் பனிக்காலத்தில் தாங்க முடியாத குளிர்க் காற்று வீசுகின்றது. அதனால் ஜனங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கெட்டியாயும், அழுக்கடைநது பருமானுயுமுள்ள சட்டை தலைப்பாகை முதலியவைகளை அணிந்து கொண்டு, சூடு உண்டாவதற்காக ஒருவருக்கொருவர் இடித்துக் கொண்டும், செல்கின்றனர். அதனால், பகைவன் வாயுலோகத்திலிருந்து ஏவின குளிர் காற்றாகிய அம்பைத் தடுத்து, பகைவனுடன் இவ்விதம் போர்புரிய சித்தமாக இருப்பதுபோல், காணப்படுகின்றனர் என்று வருணிக்கப்படுகிறது.

६ अक्रुद्धस्य योध्स्यमानस्य । क्रुद्धस्येव लोहिनी ।
हेमतश्चक्षुषी विद्यात् । अक्षणयोः क्षिपणोरिव ॥

அக்ருத்தஸ்ய யோதஸ்ய மானஸ்ய| க்ருத்தஸ்யேவ லோஹினி|
ஹேமத: சக்ஷுஷீ வித்யாத்| அக்ஷணயோ: க்ஷிபணோரிவ ||௬||

அக்க்ருத்தஸ்ய — உண்மையில் கோபமில்லாத, ஹேமத; — முன் பனிக்காலத்தில் பிராணிகளுடைய, சக்ஷுஷீ — கண்களை, யோத்ஸ்யமானஸ்ய — போர்புரிய சித்தமாக இருப்பவனும், க்ருத்தஸ்ய — கோபம் கொண்ட, அக்ஷணயோ: — கண்களை, க்ஷிபணோ: — சுழட்டு பவனையுமுள்ள ஒரு மனிதன், சக்ஷிஷீவ — கண்களைப்போல், லோஹினீ — சிவந்த நிறமுள்ளவைகளாக, வித்யாத் — அறியவேண்டும்.

ஹேமந்தம் என்கிற முன்பனிக்காலத்தில் மிகுந்த பனியினால் எல்லா ஜனங்களுக்கும் கணகள் சிவந்திருக்கும். குளிர் தாங்காமல் கருவிழிகள் கருவிழிகளும் நிலையற்று சுழன்று கொண்டிருக்கும். இதனால், ஒரு போர் வீரன் பகைவனிடம் கோபங் கொண்டு கணகள் சிவக்க, கருவிழிகள் சுழல, தனது சேவகர்களைக் கண் ஜாடையினாலேயே எவ்விதம் ஏவுவானோ, அவ்விதம் ஜனங்கள் காணப்படுகின்றனர் என்று கூறப்பட்டது.

७. दुर्भिक्षं देवलोकेषु । मनूनामुदकं गृहे ।
एता वाचः प्रवदन्तीः । वैद्युतो यान्ति शैशिरीः ॥

துர்பிக்ஷம்தே வலோகேஷு| மனூனும் உதகம் க்ருஹே|
ஏதா வாச: ப்ரவதந்தீ:| வைத்யுதோ யாந்தி சைசிரீ: ||௭||

சிசிர பருவம்

தேவலோகேஷு — ஆகாயத்தில், உதகம் — ஜலம், துர்பிக்ஷம் — யாசித்தாலும் கிடைக்கவில்லை. மனூனும் — மனிதர்களுடைய, க்ருஹே — வீட்டில் கிணற்றில் மட்டும் கொஞ்சம் உள்ளது. ஏதா: — இந்த, வாச: — சொற்களை, ப்ரவதந்தீ: — சொல்கிறவர்களாகவும், வைத்யுத: - தாபத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும், சைசிரீ: — பின்பனிக்காலத்தில் வாழும் மக்கள், யாந்தி — நாட்களைப் போக்குகின்றனர்.

சிசிரம் என்கிற பின்பனிக் காலத்தில் ஆகாயத்தில் மேகங்கள் இல்லாததால் மழையுமில்லை. குளம் குட்டைகள் யாவையும் வறண்டு கிடக்கின்றன. சில மனிதர்களுடைய வீடுகளில் உள்ள கிணற்றுகளில் மட்டும் கொஞ்சம் ஜலம் கிடைக்கும் தாகம் எடுத்தவர்கள் அதைதான் அருந்தவேண்டும். இவ்விதம் வெகுதூரம் நடந்து தாகமும் துன்பமும் அடைந்தவர்கள் இக்காலத்தில் கூறுவது சகஜம்.

८. ता अग्निः पवमाना अन्वैक्षत । इह जीविकामपरिपश्यन् ।
तस्यैषा भवति ।।

தா அக்கினிः பவமாநா அன்வைக்ஷத|
இஹ ஜீவிகாம் அபரிபச்யன்| தஸ்யைஷா பவதி ||அ||

அக்கினிः — அக்கினிதேவர். இஹ — இந்த உலகத்தில், ஜீவிகாம் — வாழ்வுக்குச் சாதனமான ஜலத்தை, அபரிபச்யன் — தானும் காணாமையால், தாः — அந்த ஜனங்களை, அன்வைக்ஷத— பின்பற்றி ஆலோசித்தார். தஸ்ய — பிறகு அவர் தேவர்களைக் குறித்து செய்த பிரார்த்தனையை, ஏஷா — இந்த மாத்திரம், பவதி — வெளியிடுகிறது.

பின்பனிக்காலத்தில் பூமி முழுவதும் ஜலம் வறறிப்போய், மக்கள் வாழ்வதற்கே முடியாமல் போகும் நிலையை அக்கினி பகவானும் நேரில கண்டார். அவரும் உடனே கவலைப்பட்டு, மக்கள் வாழ்வதற்காக, ''மருத்'' என்கிற தேவர்களைக் குறித்து ஒரு மந்திரத்தைக் கூறி பிரார்த்தித்தார். அது பின் வருமாறு.

९. इहेहवः स्वतपसः । मरुतः सूर्यत्वचः ।
शर्म सप्रथा आवृणे ।।

இஹேஹவः ஸ்வதபஸः| மருதः ஸூர்யத்வசः|
சர்ம ஸப்ரதா ஆவ்ருணே ||கூ||

ஸ்வதபஸ் — உஷ்ணத்தை தமக்குள் அடக்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களும், ஸூர்யத்வசः — சூரியனுக்குச் சமமான காந்தியை உடையவர்களுமான, மருதः — மருத் என்கிற தேவர்களே! வः — உங்களிடமிருந்து, சர்ம — உலகத்திற்கு நன்மை தரும் ஜலத்தை, இஹஇஹ — பற்பல இடங்களில், ஸப்ரதா — நிரம்ப பொழியும்படி, ஆவ்ருணே — பிரார்த்திக்கின்றேன்.

ஓ மருத் என்கிற தேவர்களே! தாங்கள் வெய்யிலின் தாபத்தை அதிகமாக்கவும், அடக்கவும், மழை பொழியவும் சக்தி வாய்ந்தவர்கள். சூரியனுக்குச் ஸமமான ஒளி பொருந்தியவர்களாக இருக்கிறீர்கள். உலகத்தில் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத ஜலம் இன்றி வாழுகின்றனர். ஆகவே எல்லா இடங்களிலும் மழை பொழிந்து, குளம், குட்டை, ஆறு எல்லாம் நிரம்பி வழியும்படி அருளவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

நம் உடலுக்கும், உள்ளத்துக்கும் சிறந்த ஔஷதம் (அல்லது) மருந்து

—: ஸ்ரீ. T. N. க்ருஷ்ண ராமதாஸன். :—

★ ★ ★

ஆஸ்திகப் பெருமக்களே! ஸ்ரீவைஷ்ணவர்களே! ப்ராஹ்மணோத்தமர்களே! ஸகல வர்ணத்தையும் சேர்ந்த பெரியோர்களே! பெண்மணிகளே! குழந்தைகளே!

இவ்விருள் தருமா நிலத்தில் கர்ம வினையாக நாம் பிறந்து, ஸம்ஸாரக் கடலில் தத்தளித்து, நம் உடல், உள்ளத்துக்குச் ஸகலவிதமான நோய்களையும் ஏற்றுக் கொண்டு, நோய்கள் குணமாக பலவித மருந்துகள் அல்லது ஔஷதங்களை மருத்துவர்களிடம் உட்கொண்டு நோய் குணமாகி, ஹிதம் ஏற்பட்டு, ஸௌக்யம் பெற முயல்கிறோம். எப்படிப்பட்ட நல்ல மருந்தானாலும், மருத்துவர்களின் திறமையுடன் கூட, எம்பெருமான் அல்லது பகவானின் அருளும் வேண்டும் என்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

எந்த விதமான உடல் நோய், உள்ள நோய்களும் தீர்ந்து, பூர்ணகுணம் அல்லது ஸௌக்யம் ஏற்படுத்தும் ஔஷதம் அல்லது மருந்துடன் நம் ஆத்மாவுக்கும் நல்ல ஹிதம் செய்து, பாபங்களைப் போக்கி, நற்கதியடைச் செய்ய உதவும். சிறந்த ஔஷதம் அல்லது மருந்தைப்பற்றி இப்போது தெரிந்து, அதை உட்கொண்டு, எல்லோரும் எல்லா வித நன்மைகளையும் அடைந்து, தீமைகளைத் தொலைத்து, பரம ஸௌக்யத்தையும் ஆரோக்யத்தையும், நற்கதியையும் அடைந்து இன்புறுவோம்.

பரம ஸௌக்யத்தைக் கொடுக்கும் வைத்தியன், மருத்துவன் யார்? நோய்களையெல்லாம் தீர்த்து பூரண ஆரோக்யத்தை அளிக்கும் மருந்து யாது? என்று தெரிந்து கொள்ளவேண்டுமா? கவனத்துடன் கேளுங்கள்.

'மருத்துவனாய் நின்ற'வன் 'மாமணிவண்ணன்' என்ற கண்ணபிரான் என்கிற ஸ்ரீக்ருஷ்ணன். 'மருந்தே! நங்கள் போக மகிழ்ச்சிக்கு' என்று மருந்தாக இருப்பவனும் கூறப்படுபவனும் அதே கண்ண

பிரான், ஸ்ரீக்ருஷ்ணனே. ஆதலால் நமக்குச் சிறந்த வைத்திய னும் (டாக்டர்) ஸ்ரீக்ருஷ்ணனே, சிறந்த மருந்து அல்லது ஒளஷதமும் ஸ்ரீக்ருஷ்ணனே, என்பதை நாம் எல்லோரும் நன்கு நம் உள்ளத்தில் கவனத்துடன், மறவாமல், ஆழ்ந்த நம்பிக்கை யுடன், ஸந்தேகமற வைத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீக்ருஷ்ணன் அல்லது கண்ணபிரான் தான் நம சிறந்த வைத்தியன். சிறந்த ஒளஷதம் என்று சொல்லும்பொழுது ஸர்வேஸ்வரனுகிய, ஸ்ரீயஃபதியாகிய ஸ்ரீமந் நாராயணன் என்ற ஸ்ரீமஹா விஷ்ணுவின் ஸகல நாமங்களும் குறிக்கும், அடங்கும் என்று நாம் நினைவில் கொள்ளவேணடும். எம்பெருமானின் ஸகல நாமங்களையும் நாம் சொல்லி ஸேவிக்கவே எல்லா நோய் களும் தீர்ந்து நன்மைகள் பெற்றுத் தீமைகளை, பாபங்களைத் தொலைக்கலாம் என்பதை ஸந்தேஹமற நினைவில் கொள்ள வேண்டுவது அவசியம்.

இப்பொழுது நாம் தெரிந்துகொண்ட வைத்தியனின் குணம் என்ன, மருந்தின் குணம் என்ன, பலன் என்ன என்று தெரிந்து இன்புறுவோம்.

பொதுவாக மருந்துகள் தீமையைக் கொடுக்கும் நோய் களை அடக்கி, நன்மையைக் கொடுக்கும் ஸௌக்யம், ஸுகம் என்கிற ஆரோக்யத்தை அபிவிருத்தி செய்து, ஹிதம் செய்யும் சக்தியுள்ளவை. திறமையற்ற மருத்துவர்கள், நோயின் தன் மையைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் மருந்துகள் கொடுத் தால் அப்பிரயோகங்களினுல் நோய் விருத்தியாகி, குணமடை யாமல், ஆயுளுக்கே கெடுதி ஏற்படவும் வழியுண்டாகும் என் பது கண் கூடாக எல்லோரும் அறிந்த விஷயம்.

ஆனுல் நாம் இப்பொழுது அறிந்து கொண்டுள்ள திவ்ய வைத்தியன், திவ்ய ஒளஷதம் நல்லவர்களிடத்துச் சிறந்த மருந் தாயும், தீயவர்களிடத்துத் துன்பங்களை அளிக்கும் மருந்தாயும் பயன்படும் என்பதைப் பார்ப்போம்.

ஸ்ரீகுலசேகரர் என்ற ஸ்ரீகுலசேகரப் பெருமாள் ஸம்ஸ்க்ருத்தில் அருளிச் செய்து, பரமபோக்யமாக விளங்கி வருகிற முகுந்த மாலை என்ற ஸ்தோத்திரத்தில் இருபத்து நான்காவது ஸ்லோ

கத்தில மிகவும் தெளிவாக, அழகாக, நம் போன்ற பாபிகள் கடைத்தேறி, உஜ்ஜீவிக்க, நற்கதியடைய, திவ்ய ஔஷதம் யாது, திவ்ய வைத்தியன யார், ஔஷதத்தால், வைத்தியனுல் அடையும் பலன்கள் என்ன என்பதை ஸாதித்துள்ளார். அந்தப் பரம பவித்ரமான ஸ்லோகத்தையும், பதவுரை, கருத்து இவைகளையும் தெரிந்து, இன்புறுவோம்.

நித்திய விபூதியாகிய பரமபதத்துககு அதிபதியான பரம பதநாதன் என்ற எமபெருமான், ஸ்ரீமந் நாராயணன், முகுந்தன். அப்பெருமானுக்குப் பூமாலை போல், அழகாகப் பகவந் நாமங்களைத் தொகுத்து அருளிச் செய்துள்ளது முகுந்தமாலை என்ற இந்த திவ்ய ஸ்தோத்ரம். யாரும், எப்பொழுதும் இந்த ஸ்தோத்ரமாலையைச் சொல்லி, படித்து, படிக்கக்கேட்டு இன்பமடையலாம். துஞ்சும் போதழைக்கலாம், துயர்வரில் நினைக்கலாம், படிக்கலாம். துயர் இல்லாவிடினும் சொல்லி நன்மையடையலாம். ஸகலமான ஆஸ்திகர்களும் இந்த முகுந்தமாலை என்ற திவ்ய ஸ்தோத்ரமாலை முழுவதும் தெரிந்து அநுஸந்திக்க முயல்வது நல்லது.

இப்பொழுது 24-வது ஸ்லோகம் காண்போம்.

व्यामोहप्रशमौषधं मुनिमनोवृत्तिप्रवृत्त्यौषधम्
दैत्येन्द्रार्तिकरौषधं त्रिजगतां सञ्जीवनैकौषधम् ।
भक्तात्यन्तहितौषधं भवभयप्रध्वंसनैकौषधम्
श्रेयः प्राप्तिकरौषधं पिब मनः ! श्रीकृष्णदिव्यौषधम् ॥

வ்யாமோஹ ப்ரசமௌஷதம் முநிமநோவ்ருத்தி
ப்ரவ்ருத்த் யௌஷதம்
தைத்யேந்த்ரார்த்திகரௌஷதம் த்ரிஜகதாம்
ஸஞ்ஜீவநைகௌஷதம்
பக்தாத்யந்தஹிதௌஷதம் பவபயப்ரத்வம்ஸநை
கௌஷதம்
ச்ரேயஃ ப்ராப்திகரௌஷதம் பிப மநஃ!
ஸ்ரீக்ருஷ்ண திவ்யௌஷதம்.

பத விபாகம்-பதவுரை-கருத்து தெரிந்து கொள்வோம்.

ஹே மந:!	=	வாராய், ஹே மனதே!
வ்யாமோஹ	=	(கெடுதலையுண்டுபண்ணும் விஷயாந்தரங்களிலுள்ள) மோஹத்தை,
ப்ரசம ஒளஷதம்	=	போக்கவல்ல மருந்தாயும்,
முநிமநோவ்ருத்தி	=	முனிவர்களின் மனத்தைத்.
ப்ரவருததி ஒளஷதம்	=	தன்னிடத்தில் செலுததிக் கொள்ளவல்ல மருந்தாயும்,
தைத்யேந்த்ர	=	அஸுரர்களில் தலைவரான கால நேமி முதலியவர்களுக்கு.
ஆர்த்திகர ஒளஷதம்	=	தீராத அதிகமான துன்பத்தைத் தரும் மருந்தாயும்,
த்ரிஜகதாம்	=	மூன்று உலகத்திலுள்ளவர் களுக்கும்,
ஸஞ்ஜீவன	=	ரக்ஷித்து, உஜ்ஜீவனத்துக்குரிய,
ஏக ஒளஷதம்	=	ஒரே (முக்யமான) மருந்தாயும்,
பக்த அத்யந்த ஹித ஒளஷதம்	=	பக்தர்களுக்கு (அடியார்களுக்கு(மிகவும் ஹிதம் அல்லது நன்மையைச் செய்கிற மருந்தாயும்,
பவபய	=	ஸம்ஸார பயத்தைப்,
ப்ரத்வமஸந ஏக ஒளஷதம்	=	போக்குவதில் அல்லது நீக்குவதில் ஒரே முக்கியமான மருந்தாயும்,
ச்ரேய:	=	நன்மையை,
ப்ராப்திகர ஒளஷதம்	=	அடைவிக்கும் (கொடுக்கும், பெறச் செய்யும்) மருந்தாயும் உள்ள,
ஸ்ரீக்ருஷ்ண திவ்ய ஒளஷதம்	=	ஸ்ரீக்ருஷ்ணன் என்கிற கண்ண பிரானுகிற திவ்யமான, அருமையான, பரமபோக்யமான மருந்தை.
பிப	=	உட்கொள்.

ஏ மனமே! ஸ்ரீக்ருஷ்ணனின் நாமத்தைச் சொல்லி, அவனை ஸேவி, ஸகலவித நன்மைகளும் பெறுவாய. தீமைகளையெல்லாம்

தொலைப்பாய். கண்ணபிரான் என்ற திவ்ய ஔஷதத்தை எப்பொழுதும் அநுஸந்தித்து, ஜபித்து உட்கொள். உடல், உள்ளம், ஆத்மாவுக்குச் சிறந்த நன்மையை அடை.

ஸ்ரீக்ருஷ்ணனுகிற இந்த சிறந்த திவ்ய மருந்து, விஷயாந்தரங்களில் உண்டாகும் விரும்பக் கூடாத மோஹத்தை, கெட்ட நோயை நீக்கும்; ரிஷிகளுக்குச் சிறந்த நன்மையக் கொடுக்கும், எப்படியெனில், அவர்களின் மனதைத் தன் பக்கம், தன்னிடம் ப்ரவ்ருத்திக்கச் செய்யும்; அஸுரர் தலைவர்களுக்குத் தீராத துன்பத்தைத்தரும்; மூன்று உலகத்திலுள்ள ஸஜ்ஜனங்களுக்கு ரக்ஷகமான மருந்தாகும்; தன் அடியார்களுக்கு மிகவும் நன்மையைச் செய்யும்; எல்லோருக்கும் ஸம்ஸார பயத்தைப்போக்கி, பிறவித் துயரை அறுத்து, தன்னிருப்பிடமான பரமபதத்துக்கு அழைத்துச் சென்று பெரும் பேறு கொடுக்கும் மருந்தாகும்.

ஆதலால் எல்லா ஆஸ்திகமக்களும், பெண்மணிகள், குழந்தைகள் உள்பட எலலா வர்ணத்தையும் சேர்ந்தவர்களும் ஸதா பகவந் நாமங்களை உச்சரித்து, ஸேவித்து சகல வித தீமைகள், நோய்களையும் ஒழித்து, நன்மையடைந்து, எம்பெருமான் திருவடி நிழலையடையும் பெரும்பேறு அடைந்து, உஜ்ஜீவிக்குமாறு ப்ரார்த்தித்துக கொண்டு, இச்சிறு கட்டுரை அல்லது வியாஸத்தை கண்ணபிரானுகிய ஸ்ரீக்ருஷ்ணனின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன்.



EDITED AND PUBLISHED BY M. CHANDRAMOULI REDDY, EXECUTIVE OFFICER TIRUMALA-TIRUPATI DEVASTHANAMS AND PRINTED AT T. T. D. PRESS, TIRUPATI.

HOTO NEWS :



Photos taken in connection with the inauguration of the 4 *Bed special ward constructed by the T. T. D in S. V R. R. Hospital Tirupati, by* G. RANGA RAJU, *the Chairman of the T. T D. on* 21–4–71

In the picture below:

Sarvasri G. Rangaraju, K. Siddiah Naidu, K. V. Krishnamurthy and V. Sanyasi Naidu (*Members T. T. D. Board*) are seen with Sri M. Chandramouli Reddy (*Executive Officer, T. T. D.*) and Dr. Satyanarayana Murthy (*Superintendent of S. V R.R. Hospital*)

